# தொல்காப்பியர் வழி பெண்கள் நிலை

**வி. அம்பிகா,**
**எம்.பி.ஜி.ஷீலா,**
**பி.பிரதேவ் ஆதிவேல்,**
**பவித்ரா மற்றும் எஸ். எப்சிபா**
கோவை வித்தியா மந்திர் பள்ளி
கோவை

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

தொல்காப்பியம் தமிழ்மொழியின் அமைப்பையும்,அதன் தொன்மையும் எடுத்துக்காட்டும் பழம்பெரும் நூலாகும் தமிழர்களுக்கு இரு கண்கள் என்றால் அது தொல்காப்பியமும், திருக்குறளும் ஆகும். உலகிலே தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியமே என்று கூறுகிறார் புலவர் வெற்றியழகன். (www.வலைதமிழ்.காம்)

தமிழர் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் பற்றிய வரலற்றைப் பொருளதிகாரம் மூலம் படம்பிடித்துக்காட்டும் நூல் தொல்காப்பியமே. இதனை இளம்பூரணர் முதல் இன்றுவரை உள்ள உரையாசிரியர்களின் உரையில் காணலாம். பொருளிலக்கணத்தில் மூலமாக அன்றைய சமூகப் பின் புலத்தையும் அறிய முடிகிறது.

அகம், புறம் என மனிதவாழ்க்கையை இரு கூறுகளாகப் பாகுபடுத்தினார். இந்த வாழ்க்கை இலக்கணத்தில் அவர் காலப் பெண்களின் நிலை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## அகத்திணையில் பெண்களின் இயல்பு

மென்மையானவள் என்றாலே பெண்கள் என்று அக்காலமுதல் இன்று வரை நிலவிவரும் கருத்து. அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு என்ற குணங்களை இயல்பாகவே உடையவள் பெண்.

**"அச்சமும் நாணும் மடமும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரியஎன்ப"**

(தொல்.பொரு.இளம்.96, களவு-7)

என்ற நூற்பாவின்படி அச்சம்,மடம்,நாணம்,பேதைமை என்ற மூன்று நற்குணங்களும் பெண்களுக்கு இருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

**"பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே**
**நட்பின் நடக்கை ஆங்கலங்கடையே"**

(தொல்.பொரு.இளம்.198, பொருள்-5)

என்ற நூற்பாவில் தலைவி, நற்றாய், செவிலி, தோழி இவர் நால்வரும் நட்புடன் பேசிக்கொள்வர் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். நால்வரும் ஓருயிர் போல் இருப்பர் என்று இளம்பூரணர் உரையில் நாம் காணலாம்.

பெண்பாலர், மிகுந்த நாகரிகச் சிறப்பு, அடக்கம், மனத்தை அடக்குதல், நேர்மை, சொல்லாற்றல், நன்மை தீமையை முன்னதாகப் பிரித்தறியும் திறன், எவரிடமும் இல்லாத அரியதன்மை என இவை அனைத்தும் பெண்பாலரிடம் காணப்படும் நற்குணங்கள் என்று தமிழண்ணல் தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-1 இல் விளக்கியுள்ளார்.

**"செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான"** (தொல்.பொருள்.தமிழண்ணல்-1154, பொருள்-13)

மேற்கூறிய நற்குணங்கள் மிகுந்தவர்களே பெண்கள் என்று இந்த நூற்பாவில் தெளிவாகிறது.

**கற்பு**

'கற்பு' என்பது பெண்களுக்கு உயிர் போன்றது. பெண்களுக்குச் சிறப்பு என்னவென்றால் கற்பின் வழி நடப்பதே.

**"கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்**
**மெல்லியர் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்"** (தொல்.பொருள்.இளம்-150, கற்பு-11)

என்ற நூற்பாவில் திருமணமான பெண்ணுக்குக் கற்பு, காமம், நல்ல ஒழுக்கம், மென்மை, பொறுமை, விருந்தினரை பேணுதல், சுற்றத்தாரை உபசரித்தல் மற்றும் பிறவும் இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது.

உடன்போக்குக்குப் பின் தலைவன் பிரிந்தபோது தோழியின் துணையுடன் கற்பு நெறியில் நிற்பவள் என்பதை

**"போக்குடன் அறிந்தபின் தோழியோடு கெழீஇக்**
**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்" (களவு-25)**

என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

கற்பு வாழ்க்கையில் பெண்களின் நிலை களவு வாழ்க்கையைவிட மேலோங்கி இருந்தது என்பது 'தொல்காப்பியக் காலப் பெண்களின் நிலை' என்னும் கருத்து இக்கட்டுரையின் மூலம் தெளிவாகிறது. (www.வலைதமிழ்.காம்)

தலைவனும்,தலைவியும் தாமே சந்தித்துக் காதலித்து மறைவாய்த் தம் காதலை வளர்த்துக் கொள்வது 'களவு' என்றும், திருமணத்திக்குப் பின்னர் மனையகத்தே ஊடியும் ,கூடியும் வாழ்வது 'கற்பு' என்றும் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் கட்டுரையில் முனைவர்.பூவண்ணன் கூறுகிறார்.

**புறத்திணையில் பெண்களின் இயல்பு**

ஆணும், பெண்ணும் ஆரம்பகாலங்களில் சமமாகச் செயல்பட்டனர். புறத்திணையில் பெண்களின் பங்கு என்ன என்பது சிறப்பாகப் பேசப்பட்டது. வீரம்,கல்வி,புகழ் போன்றவற்றில் சிறந்தவர்கள் பெண்கள்.

தன் ஒரே மகனை போருக்கு அனுப்புதல்,கணவன் இறந்துவிட்டான் என்பதைத் தாங்காது உயிர்நீத்தல்,கணவனின் ஈமத்தீயுள் பாய்ந்து உயிர்விடல் போன்ற கடுமையான துன்பங்களை

ஏற்பவளாக பெண் காட்டப்படுகிறாள் என்பதைத் தொல்காப்பியத்தில் காணலாம். பெண் எதையும் தாங்கும் இதயம் உடையவள் என்பதைப் புறத்திணைப் பாடல் எடுத்துரைக்கிறது. (www.வலைதமிழ். காம்)

**பெண்ணுரிமை**

பெண் விடுதலை என்பது பெண் பற்றிய புதிய கருத்துக்களை உருவாக்குவதன்மூலமே சாத்தியம். இப்பெண்ணுரிமை கருத்துக்களைத் தொல்காப்பியத்தில் காண முடிகிறது.

**மறுக்கும் உரிமை**

தொல்காப்பியர் காலச்சமூகத்தில் பெண்ணுரிமைச் சிந்தனை மிகுதியாக இருப்பது தமிழர்க்குப் பெருமையானதாகும்

**“சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
அல்ல கூற்றுமொழி அவள் வயினான”**

(தொல்.பொருள்.இளம்-108, அகம்-108)

என்பதைத் தொல்காப்பிய வரிகள் உணர்த்துகின்றன.

**“வழிபாடு மறுத்தல் மறுத்தெதிர் கோடல்”** (தொல்.பொருள்.இளம்-109)

பெண்களுக்கு மறுக்கும் உரிமையை அக்கால சமுதாயம் வழங்கியிருந்தது என்பதைத் தொல்காப்பியத்தின் மூலம் அறிய முடிகிறது.

**கருத்து கூறும் உரிமை**

**“களஞ்சுட்டு கிளவி கிழவியதாகும்”** (தொல்.பொருள்.இளம்-118)

என்ற நூற்பாவில் பெண் சந்திக்கும் இடத்தைத் தானே முடிவு செய்யும் உரிமையைச் பெற்றிருந்தாள். முடிவினைக் கூறும் உரிமை பெண்ணிற்கு இருந்திருக்கிறது இதனைத் தெளிவுபடுத்துகிறார் உரையாசிரியர் இளம்பூரணர்.

**“போக்குடன் அறிந்தத் தோழி”** (தொல்.பொருள்.இளம்-113)

என்ற தொல்காப்பியர் கருத்துக்களில் இருந்து இல்லற வாழ்க்கையிலும் முடிவெடுக்கும் உரிமை பெண்ணிற்கு வழங்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

**“உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்”** (தொல்.பொருள்.இளம்-180)

தனக்கு உரிமையைக் கொடுத்த தலைவனின்பால் அன்புகொண்டவளாக இருக்கிறாள் பெண் என்ற உண்மையைத் தொல்காப்பியத்தில் அறிய முடிகிறது.

**“மொழி எதிர் மொழிதல் பாங்கற்குஉரித்தோ”** (தொல்.பொருள்.இளம்-180)

பெண்ணிற்குத் தன் தலைவனின் கருத்திற்கு எதிர்க்கருத்துக் கூற உரிமை உண்டு எனக் குறிப்பிட்டு அக்காலப்பெண்ணின் உரிமைகளான கருத்துக் கூறும் பக்குவம் மற்றும் உரிமைக்கோட்பாட்டைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது.

**ஆணும் பெண்ணும் சமம்**

ஆணும் பெண்ணும் இணைந்து நடத்துவதுதான் குடும்பம். குடும்பம் சிறக்க வேண்டும் என்றால் ஆண் பெண் சமத்துவ உரிமைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதை,

**"பிறப்பே குடிமை ஆண்மை"** (தொல்.பொருள்.இளம்-269)
என்ற நூற்பா கூறுகிறது.

### பெண்ணுரிமை மறுப்பு

அக்காலச் சூழலில் உரிமைகளைக் கூறிய தொல்காப்பியர் மறுப்பையும் கூறத்தவறவில்லை.

**"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினுஞ்**
**செயிதீர்க் காட்சி கற்பு சிருந்தன்று"** (தொல்.பொருள்.இளம்-111)
**"முந்நீர் வழக்கம் மகடூஉ வொடு இல்லை"** (தொல்.பொருள்.இளம்-37)

என்ற நூற்பாவின் வழி 'கற்பு' என்ற ஒரு காரணத்தைக்காட்டிப் பெண்ணிற்கு உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த அக்காலச் சூழலினைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

### நிறைவுரை

ஆணாகவும் பெண்ணாகவும் வேறுபடுத்திக்காட்டுவது அவர்களது உறுப்புகள் மட்டுமே. ஆனால் ஆண் வேறு, பெண் வேறு என்று பிரிப்பது செயற்கையானது. ஆணும் பெண்ணும் சேர்ந்ததுதான் சமூகம்.

இவர்களின் குணநலன்களிளை ஆண்மை, பெண்மை என்ற சொற்களால் சுட்டுகின்றது இலக்கண நூல்கள்.

முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் பல்வேறு நூற்பாக்களில் பொருளிலக்கணத்தின் மூலம் ஆண், பெண் குணநலன்களை எடுத்துரைக்கிறது. தொல்காப்பியர் காலச்சமூகத்தில் காதல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் காதலில் பெண்கள் உணர்விக்குச் சமூகம் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பெண்ணுக்குக் கூறப்பட்ட கற்பு என்ற ஒழுக்கம் ஆணுக்குக் கூறப்படவில்லை.

"அன்பின் ஐந்திணை பாற்படாது" என்கிறார் இளம்பூரணர். எனவே ஆண், பெண் இருவரும் பிறப்பு முதல் இறுதிவரை ஒத்த கருத்துடன் இருப்பது மட்டுமே சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி முறையாக இருந்திருக்கின்றது.

தொல்காப்பியர் காலப் பெண்கள் கணவன் இறந்தவுடன் அத்துனைத் துன்பங்களையும் ஏற்றக் கொண்டவளாக இருக்கிறாள்.

அக்காலப்பெண்களின் உரிமைகள், உரிமைமறுப்புக்கள் போன்றவற்றை நடுநிலையோடு வெளிப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

இன்று இருக்கும் பெண்ணுரிமைச் சிந்தனைக்கு அடிப்படையை அன்றே வெளிப்படுத்தினார் தொல்காப்பியரின் சமூக அக்கறையும், நல்லெண்ணங்களும், உரிமைச்சிந்தனைகளும் போற்றுதலுக்கு உரியது.

தமிழில் கிடைத்துள்ள நூல்களில் தொன்மையானது தொல்காப்பியம். இதை மரம் அடர்ந்த வனம் எனக் கருதி உள்நுழைய அஞ்சி நின்றனர் தமிழ் மக்கள். அது வனம் இல்லை அழகான மலர்கள் மலர்ந்து மணம் கமழும் பூங்கா என நிறுபித்தது இளம்பூரணர் உரை.

### பார்வை நூல்

1. தமிழ் தகவல் களஞ்சியம்-www.வலைத்தமிழ். காம்
2. பூவண்ணன், தமிழ் இலக்கிய வரலாறு - கழகப்பதிப்பு - 2001.
3. தமிழண்ணல் தொல்காப்பியம்-பொருளதிகாரம், 2003.
4. தொல்காப்பியம்- பொருளதிகாரம்,இளம்பூரணனார் உரை, 13 ஆம் பதிப்ப-2014,
5. முனைவர் ஆண்டியப்பன் தே., தொல்காப்பியம்- பொருளதிகாரம் எளிய உரை, 2008.